செங்கல்பட்டில் பரிதாபம்:

பி.காம் பட்டதாரி பெண் தூக்குப்போட்டு சாவு

காதலன் தற்கொலை செய்த பின் பெற்றோர் வேறு மாப்பிள்ளை தேடியதால் விரக்தி

செங்கல்பட்டு, ஆக. 12 கடலூர் மாவட்டத்தை சேர்ந்தவர் ரமேஷ் (48) இவருக்கு ரோஸ் என்கிற மனைவியும் ரேவதி(23) என்ற மகளும் மற்றும் 20 வயதில் ஒருமகனும் உள்ளனர்.

ரேவதி பி.காம் படித்தவர் ரமேஷ் கடந்த15ஆண்டுகளுக்கு முன்பு செங்கல்பட்டு அடுத்த அம்மனம்பாக்கம் பகுதியில் சொந்தவீடு கட்டி குடும்பத்தோடு வசித்து வந்துள்ளார்.

அப்போது அதே பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரும் ரமேஷின் மகள் ரேவதியும் ஒருவரைஒருவர் காதலித்து வந்ததாகவும் ரேவதியின் காதலை குடும்பத்தினர் ஏற்க மறுத்ததால் அந்த இளைஞர் கடந்த ஆறுமாதம் முன்பு தற்கொலை செய்து

கொண்டதாகவும் கூறப்படுகிறது. அந்த இளைஞர் தற்கொலை செய்து கொண்டதில் இருந்தே ரேவதி மன உளச்சலில் இருந்துள்ளார்.

ஒரு மாறுதலுக்காக ரமேஷ் சொந்த வீட்டை விட்டு செங்கல்பட்டு அனுமந்தபுத்தேரி பகுதியில் ஒருவாடகை வீட்டில் குடும்பத்தோடு வசித்து வந்துள்ளனர். இருந்தாலும் ரேவதி தொடர்ந்து மன அழுத்தத்தில் இருந்து வந்துள்ளார்.

அவரது நடவடிக்கையில் கொஞ்சம் மாற்றம் தெரிந்ததால் அவரது பெற்றோர் வேலைக்கு அனுப்பி வைத்தனர்.

வேலைக்கு சென்று வந்த ரேவதிக்கு திருமணம்செய்துவைக்கமுடிவு செய்து மாப்பிள்ளை பார்க்கும் படலத்தை தொடங்கினர் ஆனால் திருமணத்தில் ரேவதிக்கு விருப்பமில்லை என கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று காலை ரேவதியின் தம்பி கல்லூரிக்கு சென்று விட்டார். அம்மா,அப்பா இருவரும் வேலைக்கு செல்லும்போது ரேவதிக்கும் டிபன் பாக்ஸில் உணவு கட்டிக்கொடுத்துள்ளனர். இந்நிலையில் வேலைக்கு சென்றிருந்த தாய் மதியம் 3மணிக்கு வந்து பார்த்த போது ரேவதி வீட்டில் உள்ள மின்விசிறியில் துப்பட்டாவை கொண்டு தூக்கில் சடலமாக கிடந்துள்ளார்

இது தொடர்பாக காவல் துறைக்கு தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த செங்கல்பட்டு நகர போலீசார், ரேவதியின்சடலத்தை மீட்டுபிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்து, தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணைநடத்தி வருகின்றனர்.திருமணம் ஆகாத இளம்பெண் தற்கொலை சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் சோகத்தையும் ஏற்ப்படுத்தியுள்ளது.

மதுரை அருகே

மண் திருடிய லாரியை மடக்கிப் பிடித்த இளைஞர்கள்

துணை வட்டாட்சியரிடம் ஒப்படைப்பு

அலங்காநல்லூர், ஆகஸ்ட்.12 மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே அ.கோவில்பட்டி நவக்குளம் கண்மாயில் தொடர்ச்சியாக மண் திருட்டு நடைபெற்று வருவதாகப் புகார்கள் எழுந்த நிலையில் இதனை கண்காணித்து வந்த அப்பகுதி இளைஞர்கள் மண் திருட்டில் ஈடுபடும் நபர்களைக் கையும் களவுமாகப் பிடிக்க தீவிர முயற்சியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்று கண்மாயில் முறைகேடாக லாரியில் மண் அள்ளப்பட்டதை அறிந்த இளைஞர்கள்உடனடியாகத்திரண்டு அந்த லாரியை மடக்கிப் பிடித்து சிறைபிடித்தனர்.

அப்பொழுது லாரி டிரைவர் அங்கிருந்து தப்பி ஓடிய நிலையில் இதுகுறித்து உடனடியாக வருவாய்த் துறை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.தகவலின் பேரில் கிராம நிர்வாக அலுவலர்சுரேஷ் கண்ணன் மற்றும் வாடிப்பட்டி மண்டல துணை வட்டாட்சியர்ரகுபதி ஆகியோர் நிகழ்விடத்திற்கு நேரில் விரைந்து விசாரணை செய்தனர். லாரி டிரைவர் தப்பி ஓடிய நிலையில் அங்கு வந்த லாரியின் உரிமையாளர் ஜலாலுதீன் என்பவரிடம் அதிகாரிகள் விசாரணை செய்த பொழுது முறைகேடாக மண் அள்ளியது தெரியவந்தது மேலும் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே லாரியின் உரிமையாளரும் அங்கிருந்து தப்பி ஓடியதாக கூறப்படுகிறது. தொடர்ந்து முறையான ஆவணங்கள் இன்றி மண் திருட்டில் ஈடுபட்ட லாரியை அதிகாரிகள் பறிமுதல் செய்துஅலங்காநல்லூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்து மண் திருட்டில் ஈடுபட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளித்தனர்.மேலும் விவசாயி என்ற பெயரைக் கூறிக்கொண்டு இது போன்று முறைகேடான மண் திருட்டில் ஈடுபடுவது இப்பகுதியில்தொடர்கதையாகி வருவதாகவும் எனவே இதுபோன்ற சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீதும் இதனைத் தடுத்து நிறுத்தாமல் கண்டும் காணாமல் இருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் மாவட்ட நிர்வாகம் உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

காவிரி பிரச்சனையில் அனைத்துகட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும்

நெல்லுக்கான ஊக்கத்தொகை உயர்த்தியது போதுமானது அல்ல

சி.பி.ஐ. முத்தரசன் பேட்டி

மயிலாடுதுறை, ஆக. 12– தமிழக அரசு நெல், கரும்புக்கான ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்கியுள்ளது மகிழ்ச்சி அளித்தாலும், தவெக தேர்தல் அறிக்கையில் அறிவித்ததுபோல் உயர்த்தவில்லை. நெல்லுக்கான ஊக்கத்தொகை உயர்த்தியது போதுமானது அல்ல என மயிலாடுதுறையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் முத்தரசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாட்டில்; நிகழ்ச்சிகளில் முதலில் தமிழ்த் தாய் வாழ்த்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் அனைத்து கட்சியினரும் ஒருமித்த கருத்தில் தீர்மானம் நிறைவேற்றியது மகிழ்ச்சி. இதேபோல், தமிழகத்தின் அனைத்து பிரச்னைகளிலும் அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

தமிழகத்திற்கு மிகப்பெரிய ஆபத்தாக காவிரி நதி நீர் பிரச்னை உள்ளது. கர்நாடகாவில் யார் ஆட்சி செய்தாலும் தமிழகத்திற்கு தண்ணீர் தருவதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். தமிழகத்தை வடிகாலாக பயன்படுத்த வேண்டும் என கர்நாடகா நினைக்கிறது. தமிழகத்திற்கு முற்றிலுமாக தண்ணீர் கிடைக்காமல் செய்யும் வகையில் மேக்கேதாட்டில் அணை கட்ட கர்நாடகா முயற்சிக்கிறது.

தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 22 மாவட்டங்கள் குடிநீருக்காக காவிரி நீரை நம்பியே உள்ளன. மேகதாதுவில் அணை கட்டப்பட்டால் அங்கு 67 டிஎம்சி தண்ணீர் தேக்கப்படும். தமிழ்நாடு பாலைவனமாகும். மத்திய அரசு நடுநிலையாக செயல்படாமல் கர்நாடகாவிற்கு ஆதரவாக செயல்படுகிறது.

கர்நாடகாவில் உள்ள அனைத்து கட்சிகளும் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்று பட்ட நிலையை மேற்கொள்கிறார்கள். தமிழ்நாட்டில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட வேண்டும் என தமிழக முதல்வரை வலியுறுத்தினோம்.

ஆனால் அமைச்சர் அனைத்துகட்சி கூட்டம் தேவை இல்லை என்று கூறுவது ஏற்புடைய தல்லை.

நூறுநாள் வேலைத் திட்டத்தை சீர்குலைக்கும் முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. தமிழக அரசு 150 நாள்கள் வேலை வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவித்துள்ளது மகிழ்ச்சி. ஆனால் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வில்லை. பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும். தொகுதி மறுவரையில் மத்திய அரசு சூழ்ச்சி செய்கிறது.

ஏப்ரல் மாதம் மசோதா கொண்டுவந்தபோது முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சியில் மசோதா நாடாளுமன்றத்தில் வந்த போது தோற்கடிக்கப்பட்டது. ஐந்து மாநில தேர்தலுக்கு பிறகு பாஜக பிற கட்சிகளை உடைத்து 850 எம்.பி. இடங்களாக உயர்த்த மத்திய அரசு முயற்சி செய்கிறது. இது நாட்டின் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையை மத்திய அரசு முயற்சி செய்கிறது.

தமிழக அரசு நெல், கரும்புக்கான ஊக்கத் தொகை உயர்த்தி வழங்கியுள்ளது .

மகிழ்ச்சி அளித்தாலும், தவெக தேர்தல் அறிக்கையில் அறிவித்ததுபோல் உயர்த்தவில்லை.

தற்போது நெல்லுக்கான ஊக்கத்தொகை உயர்த்தியது போதுமானது அல்ல என்று கூறினார். அப்போது, மாவட்ட செயலாளர் ஏ.சீனிவாசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

காட்டுப்பாக்கத்தில்

சந்தன மரங்கள் வெட்டிக் கடத்தப்படவில்லை

கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் விளக்கம்

சென்னை,ஆக.12– காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி மையத்தில் சந்தன மரங்கள் வெட்டிக் கடத்தப்பட்டதாக வெளியான செய்திகள்தவறானது என்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. வளாகத்தில் சந்தன மரங்கள் எதுவும் பராமரிக்கப்பட வில்லை என்று விளக்கம் அளித்துள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் செங்கல்பட்டு மாவட்டம் காட்டுப்பாக்கத்தில் இயங்கி வரும் கால்நடை ஆராய்ச்சி மையத்தில் சமீபத்தில் பல கோடி மதிப்புள்ள சந்தன மரங்கள் வெட்டிக் கடத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இதை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக பல்கலைக்கழக பதிவாளர் இர.நரேந்திர பாபு வெளியிட்ட அறிக்கை:

காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி மையத்தில் சந்தன மரங்கள் எதுவும் பராமரிக்க ப்படவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு, வர்தா புயலின் தாக்கத்தால் விழுந்து காய்ந்த தேக்கு மரங்கள், பல்கலைக்கழகத்தால் முறையாக அமைக்கப்பட்ட அரசு அதிகாரிகள் கொண்ட குழுவினரால் ஏல முறையில் ஏற்கெனவே அகற்றப் பட்டன.

தற்போது, பராமரிப்பு காரணங்களால் உயர் மட்ட மின் பாதைகள் மற்றும்

நீர்க்குழாய்களின் அருகே இடையூறாக இருந்த மரக்கிளைகள், கால்நடைகளுக்கு பசுந்தீவனத்துக்கு கழிக்கப்படும் கிளைகள் மட்டுமே அகற்றப்பட்டன. பல்கலைக் கழகத்தின் விலை நிர்ணயக் குழுவால் அதற்கு விலை நிர்ணயம் செய்யப் பட்டு, விற்பனை செய்து, பல்கலைக்கழக கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.கால் நடை ஆராய்ச்சி மையம் 24 மணி நேர கண்காணிப்பில் உள்ளது.

அங்கீகரிக்கப்படாத யாரும் உள்ளே நுழையவோ, மரங்களை அப்புறப்படுத்தவோ வாய்ப்பு இல்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சங்கரன்கோவில் அருகே

பைக் மீது அரசு பஸ் மோதி வாலிபர் உட்பட 2 பேர் பலி

நள்ளிரவில் விபத்து

நெல்லை, ஆக.12– சங்கரன்கோவில் அருகே நள்ளிரவு பைக் மீது அரசு பஸ் மோதிய விபத்தில் வாலிபர் உள்பட 2 பேர் பரிதாபமாக இறந்தனர். தூத்துக்குடி அண்ணாநகர் 4–வது தெருவை சேர்ந்தவர் பகத் சிங் மகன் கலையரசன்(23). தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலை அடுத்த பனவடலிசத்திரம் அருகே உள்ள மீன்துள்ளி மெயின்ரோடு பகுதியை சேர்ந்தவர் பாப்பு மகன் அய்யாத்துரை(40). இவர்கள் இருவரும் நேற்று நள்ளிரவு பைக்கில் சங்கரன்கோவிலில் இருந்து நெல்லை ரோடு வழியாக ஊருக்கு சென்று கொண்டிருந்தனர். இதையடுத்து அவர்கள் அங்குள்ள காலங்கரை ஓடை அருகே வந்தபோது எதிரே நெல்லையில் இருந்து சங்கரன்கோவிலை நோக்கி வந்த அரசு பஸ் எதிர்பாராதவிதமாக பைக் மீது மோதியது. இதனால் பைக்கைஓட்டிவந்தகலையரசன் பின்னால் அமர்ந்திருந்த அய்யாத்துரையை இருவரும் தூக்கி வீசப்பட்டனர். இதில் கலையரசன் உடல் நசுங்கிய நிலையில் குடல் சரிந்து சம்பவ இடத்திலேயே ரத்தவெள்ளத்தில் பரிதாபமாக இறந்தார்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த சின்னக்கோவிலான்குளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் காசிராஜன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அங்கு பலத்த காயத்துடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த அய்யாத்துரையை மீட்டு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அங்கிருந்து பாளை அரசு மருத்துவமனைக்கு அய்யாத்துரை அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி இன்று காலை அய்யாத்துரை பரிதாபமாக இறந்தார். இதனிடையே சம்பவ இடத்தில் பலியான கலையரசன் உடல் பிரேத பரிசோதனைக்காக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து சின்னக்கோவிலான்குளம் போலீசார் வழக்குப திந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆகஸ்ட் மாதத்தில் 6 நாட்களில்

நெல்லை – திருச்செந்தூர் பாசஞ்சர் ரெயில்கள் ரத்து

பொறியியல் பராமரிப்பு பணியால் மாற்றம்

நாசரேத், ஆக.12 பொறியியல் பராமரிப்பு பணிகாரணமாகநெல்லை திருச்செந்தூர் இடையே பாசஞ்சர் ரயில்கள் ஆகஸ்ட் 12 முதல் சில நாட்கள் ரத்து செய்யப்படுகிறது. இதுகுறித்து தென்னக ரயில்வே மதுரை கோட்டம் அறிவித்துள்ள அறிவிப்பின் படி,

வருகிற ஆகஸ்ட் 12, 13 ஆகிய இரு தினங்கள் நெல்லையில் இருந்து காலை 7:10மணிக்குதிருச்செந்தூர் செல்லும் ரயில் வண்டி எண் 56751 மற்றும் திருச்செந்தூரில் இருந்து மாலை 4:25 மணிக்கு நெல்லை செல்லும் ரயில் வண்டி எண் 56754 ஆகிய 2 ரயில்கள் முழுமையாகவும், பாலக்காடு திருச்செந்தூர் பயணிகள் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிஎண்16731,16732 நெல்லை திருச்செந்தூர் இடையே பகுதியாகவும் ரத்து செய்யப்படுகிறது.

இந்த ரயிலானது நாளை மற்றும் நாளை மறுநாள் (ஆகஸ்ட் 12,13) திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்தில் இருந்து மதியம் 1:50 மணிக்கு பாலக்காடு புறப்பட்டுச் செல்லும். மேலும் திருச்செந்தூரில் இருந்து காலை 10 மணிக்கு நெல்லை செல்லும் வண்டி எண். 56004, மறு மார்க்கத்தில் நெல்லையில் இருந்து மாலை 4:30 மணிக்கு திருச்செந்தூர் செல்லும் ரயில் வண்டி எண் 56003 ஆகிய இரு ரயில்கள் ஆகஸ்ட் 13,14,17,22, 24,25 ஆகிய 6 நாட்கள் முழுமையாக ரத்து செய்யப்படுகிறது என தென்னக ரயில்வே மதுரைகோட்டம் அறிவித்துள்ளது. இதனால் பயணிகள் தங்கனது பயணத்தை முன் கூட்டியே திட்டமிட்டு அமைத்துக் கொள்ளவும் கேட்டுக் கொண்டுள்ளது.

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda — HAL 3வது நிலை கிளை

எண்.42, 80 அடி சாலை, HAL 3வது நிலை, பெங்களூரு-560075. தொலைபேசி: 080-25280160, மின்னஞ்சல்: vjhal@bankofbaroda.bank.in இணையதளம்: www.bankofbaroda.com

அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு "பின்னிணைப்பு-IV-A [விதி 6 (2) & 8 (6)-இன் நிபந்தனையைப் பார்க்கவும்]

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்று அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ், பிணையப் பற்று (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 6 (2) & 8 (6)-இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கப்படும் அசையாச் சொத்து விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன் வாங்குபவர்(கள்), அடமானம் வைப்பவர்(கள்) மற்றும் உத்தரவாதம் அளிப்பவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்கு அடமானம்/பற்று வைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவரான பேங்க் ஆஃப் பரோடாவின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் உடைமை எடுக்கப்பட்ட, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கில் உள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, 15.09.2026 அன்று **"உள்ளபடியே, இருக்கும் இடத்தில்", "உள்ளபடியே, என்ன இருக்கிறதோ அப்படியே", மற்றும் "இருப்பது எதுவாக இருந்தாலும்"** என்ற அடிப்படையில் விற்கப்படும். கடன் வாங்குபவர்(கள்)/அடமானம் வைப்பவர்(கள்)/உத்தரவாதம் அளிப்பவர்(கள்)/பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்)/நிலுவைத் தொகை/காப்பு விலை/மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், ஈஎம்டி மற்றும் ஏல அதிகரிப்புத் தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வ எண்.	கடன் வாங்குபவர், அடமானம் வைப்பவர்/கள் மற்றும் உத்தரவாதம் அளிப்பவர்/களின் பெயர் மற்றும் முகவரி	அசையா/அசையும் சொத்தின் விரிவான விவரம் மற்றும் அறியப்பட்ட வில்லங்கங்கள், ஏதேனும் இருந்தால் (உரிமையாளர்/அடமானம் வைப்பவர் பெயர்:திரு. ஏ. சுரேஷ் ஹெக்டே & திருமதி. அம்பிகா ஹெக்டே)	மொத்த நிலுவைத் தொகை	மின்னணு ஏலத்தின் தேதி மற்றும் நேரம்	முன்பதிவு விலை,முன்வைப்பு வைப்புத்தொகை (EMD), முன்பணத் தொகைக்கான கடைசித் தேதி மற்றும் ஏல அதிகரிப்புத் தொகை	சொத்தின் உடைமை நிலை (கட்டமைப்பு 1 நேரடி ஆய்வு)	சொத்து ஆய்வுத் தேதி மற்றும் நேரம்
	1) M/s. ஏகதந்தா எண்டர்பிரைசஸ், இடம் எண்.1 மற்றும் 2, கணக்கு எண்.157/8, தரைத்தளம், கே.ஆர்.புரம் ஹோப்ளி, பெங்களூரு-560066. இதன் உரிமையாளர் திரு. சுபிக்ஷா. எஸ். ஹெட்கே அவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. **2) திரு. சுபிக்ஷா. எஸ். ஹெட்கே,** த/பெ திரு. சுரேஷ் ஹெக்டே, எண்.29/1, கேப்ரியல் வில்லா, மாருதி நகர் பிரதான சாலை, 1வது குறுக்கு, எம்.ஆர். பேக்கரி அருகில், பி.டி.எம் 1வது நிலை, தர்மாரம் கல்லூரி, பெங்களூரு -560029. **மேலும் முகவரி:**பிளாட் எண்.207, பி பிளாக், கே.வி. பிரிஸ்டைன் அபார்ட்மெண்ட், பழைய கே.ஜ.பி அலுவலக சாலை, மாருதி நகர் பிரதான சாலை, பெங்களூரு-560068. **3) திரு. ஏ. சுரேஷ் ஹெக்டே,** த/பெ. திரு. சந்திர சேகர் ஹெக்டே, எண்.29/1, கேப்ரியல் வில்லா, மாருதி நகர் பிரதான சாலை, 1வது குறுக்கு, எம். ஆர். பேக்கரி அருகில், பி.டி.எம். 1வது நிலை, தர்மாரம் கல்லூரி, பெங்களூரு-560029. **மேலும் முகவரி:**பிளாட் எண்.207, பி பிளாக், கே.வி. பிரிஸ்டைன் அபார்ட்மெண்ட், பழைய கே.ஜ.பி. அலுவலக சாலை, மாருதி நகர் பிரதான சாலை, பெங்களூரு-560068. **4) திருமதி. அம்பிகா ஹெக்டே,** ம/பெ. திரு. சுரேஷ் ஹெக்டே, எண்.29/1, கேப்ரியல் வில்லா, மாருதி நகர் பிரதான சாலை, 1வது குறுக்கு, எம். ஆர். பேக்கரி அருகில், பி.டி.எம். 1வது நிலை, தர்மாரம் கல்லூரி, பெங்களூரு -560029. **மேலும் முகவரி:**பிளாட் எண்.207, பி பிளாக், கே.வி. பிரிஸ்டைன் அபார்ட்மெண்ட், பழைய கே.ஜ.பி. அலுவலகச் சாலை, மாருதி நகர் பிரதானச் சாலை, பெங்களூரு-560068. **5) திரு. புனித் ராமு,** திரு. ராமுவின் கணவர், எண்.29/1, கேப்ரியல் வில்லா, மாருதி நகர் பிரதானச் சாலை, 1வது குறுக்குச் சாலை, எம்.ஆர். பேக்கரி அருகில், பி.டி.எம். 1வது நிலை, தர்மாரம் கல்லூரி, பெங்களூரு-560029. **மேலும் முகவரி:**பிளாட் எண்.207, பி பிளாக், கே.வி. பிரிஸ்டைன் அபார்ட்மெண்ட், பழைய கே.ஜ.பி. அலுவலகச் சாலை, மாருதி நகர் பிரதானச் சாலை, பெங்களூரு-560068.	**பட்டியல் சொத்து** கிருஷ்ணகிரி மாவட்டத்தின் கிருஷ்ணகிரி பதிவு மாவட்டத்தின் கேளமங்கலம் துணைப் பதிவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட, தென்கனிக்கோட்டை தாலுக்காவின் கெம்பட்டி தலைமையகம் கொண்ட கனமனபள்ளி கிராமத்தில் உள்ள அனைத்து நிலப்பகுதிகளும். 1. சர்வே எண்.788/2, உலர்விரிவு ஹெக்டேர். 0.40.5, மதிப்பீட்டு விலை ரூ.0.25, ஏக்கர்.1.00 2. சர்வே எண்.788/1, உலர்விரிவு ஹெக்டேர். 0.48.5, மதிப்பீட்டு விலை ரூ.0.30, ஏக்கர். 1.20 3. சர்வே எண்.784, உலர்விரிவு ஹெக்டேர். 3.54.5, மதிப்பீட்டு விலை ரூ.2.19, ஏக்கர்.4.38 4. சர்வே எண்.788/3, உலர்விரிவு ஹெக்டேர். 0.66.5, உதவி ரூ.0.41 ஏக்கர் 1.64 5. சர்வே எண் 735/2, உலர்விரிப்பு ஹெக்டேர் 1.03.5, உதவி ரூ.0.64 ஏக்கர் 2.55 6. சர்வே எண் 805/1, உலர்விரிப்பு ஹெக்டேர் 0.33.5, உதவி ரூ.0.22 ஏக்கர் 0.83 7. சர்வே எண் 805/2, உலர்விரிப்பு ஹெக்டேர் 0.29.5, உதவி ரூ.0.18 ஏக்கர் 0.72 8. சர்வே எண் 805/3, உலர்விரிப்பு ஹெக்டேர் 0.40.0, உதவி ரூ.0.52 ஏக்கர் 0.72 9. சர்வே எண் 805/4, உலர்விரிப்பு ஹெக்டேர் 0.24.0, உதவி ரூ. 0.15 ஏக்கர் (0.60 ஏக்கர்), மற்றும் பின்வரும் எல்லைகளுக்குள்: கிழக்கில்: சர்வே எண் 788/1, மேற்கில்: சர்வே எண் 805/2, வடக்கில்: சர்வே எண் 805/3, தெற்கில்: சாலை. மொத்தமாக 4.38 சென்ட்கள் பரப்பளவுள்ள இந்த நிலங்கள் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, வேலூர் நகர மற்றிராம திட்டமிடல் இயக்குநரால் அவரது ஒப்புதல் எண் 25/20026-இன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், சைட் எண் 17 கொண்ட மனையானது கிழக்கிலிருந்து மேற்கு வரை 50 அடியும், வடக்கிலிருந்து தெற்கு வரை 40.50 அடியும் அளவைக் கொண்டுள்ளது. பின்வரும் எல்லைகளுக்குள் மொத்தமாக 2,025 சதுர அடி நிலப்பரப்பு: கிழக்கில் சாலை, மேற்கில் மனை எண் 23, வடக்கில் மனை எண் 18, தெற்கில் மனை எண் 731. மேற்கண்ட மனை கெம்பட்டி பஞ்சாயத்து மற்றும் தளி ஒன்றிய மன்றத்தின் எல்லைகளுக்குள் வருகிறது.	**ரூ. 69,00,419.98 (ரூபாய்அறுபத்தொன்பது இலட்சம் நானூற்றுப் பத்தொன்பது மற்றும் பைசா தொண்ணூற்றெட்டு மட்டும்) 01.08.2026 அன்றுள்ள நிலவரப்படிமேலும் இன்று வரையிலான கூடுதல் வட்டி மற்றும் கட்டணங்கள்.**	**15.09.2026 பிற்பகல் 2:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை**	**முன்வைப்பு விலை: ரூ.20,30,000/-** **முன்வைப்புத் தொகை: ரூ. 2,03,000/-** **முன்வைப்புத் தொகையைப் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்: 15.09.2026 அன்று மதியம் 02.00 மணி வரை** **ஏல அதிகரிப்புத் தொகை: ரூ. 50,000/-**	**குறியீட்டு உடைமை** **(விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரிவு எண் 19-ஐப் பார்க்கவும்)**	**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதியுடன்**

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.bankofbaroda.in/e-auction என்ற இணையதள இணைப்பையும், Baanknet.com என்ற ஆன்லைன் ஏல தளத்தையும் பார்க்கவும். மேலும், ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை 080-25280160 என்ற தொலைபேசி எண்ணிலும், 9116056262 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

தேதி: 12.08.2026
இடம்: பெங்களூரு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பேங்க் ஆஃப் பரோடா